REGD.No. M. 6311 தனி இதழ் 1 அணா ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 24உ திங்கள் (10—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 25உ செவ்வாய் (11—10—55) [இதழ் 100

'இராஜப் பிரமுகர் பதவியை ஒழித்துவிடுக'

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளில் 'இராஜப் பிரமுகர்' என்ற பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

"'இராஜ பிரமுகர்கள்' என்ற பதவி ஜனநாயக விரோதமானது—விரும்பத்தகாதது என்று நாங்கள் கருதுகிறோம்; பெரும்பாலான மக்களும் அந்தப் பதவிகள் நீடிப்பதை விரும்பவில்லை; ஆனாலும், அந்தப் பதவிகள் ஒழிக்கப்பட்டாலும், அவர்களுக்குத் தரப்பட்டு வருகிற உரிமைகளும், சலுகைகளும் பெரும் அளவு அப்படியே இருக்க வேண்டும்—குறைக்கப்படக்கூடாது,"

என்று குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

புதிய மாநில எல்லைக்கோடுகள்

16 மாநிலங்கள்—3 மத்திய ஆட்சிப் பகுதிகள்

இந்தியாவின் 'ஒற்றுமை'யை மனதில் கொண்டு சிபாரிசுகள் செய்யப்பட்டனவாம்!

இந்தியாவெங்கணும் பெரும் பரபரப்பு

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்

புதுடில்லி, அக். 10—

இந்தியத் துணைக் கண்டத்தின் மாநில எல்லைக் கோடுகளைத் திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநில புனரமைப்புக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை இன்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் வெளியேறியதும், பரவலாக 600-க்கும் மேற்பட்டிருந்த 'இந்திய சுதேச சமஸ்தானங்கள்' என்றழைக்கப்பட்ட சிறிய—பெரிய துண்டுகளாகக் கிடந்த நிலப்பரப்புக்கள் எல்லாம், ஏற்கனவே இருந்த மாநிலங்களுடன் இணைக்கப்பட்டு 27 மாநிலங்களாக இதுகாறும் இயங்கிவருகின்றன.

குழுவினரின் சிபாரிசுகளின்படி, இந்த 27 மாநிலங்களும் கூட்டலும்—குறைத்தலுக்கும் உட்பட்டு, 16 மாநிலங்களாக அமைவதுடன், மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் அமையும் மூன்று மாநிலங்களும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

குழு சிபாரிசு செய்துள்ளபடி, சென்னை, கேரளம், கர்நாடகம், ஐதராபாத், ஆந்திரம், பம்பாய், விதர்பா, மத்திய பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், அசாம், ஒரிசா, ஜம்மு-காஷ்மீர் ஆகிய 16 மாநிலங்களும், டில்லி, மணிப்பூர், அந்தமான் ஆகிய மூன்று மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாக பூமிகளும் அமைகின்றன.

இப்படி அமைகிற இந்த மாநிலங்களிடையே அரசியல் சட்ட ரீதியான வேறுபாடுகள் எதுவும் இருக்கமாட்டா; இப்போதிருக்கிற 'ஏ', 'பி', 'சி' பிரிவுகள் என்ற மாநில அமைப்பு வேறுபாடுகள் ஒழியும்.

குழுவினர் மாநில புனரமைப்பு பற்றி தாங்கள் செய்துள்ள சிபாரிசுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், இந்தியாவின் 'தேசீய ஒற்றுமையை மனதில் கொண்டே' கருத்துக்களைப் பரிசீலித்ததாகத் தெரிவித்திருக்கின்றனர்.

இப்போதுள்ள மாநில அமைப்புகளான பெப்சு, இமாசலப் பிரதேசம், மத்திய பாரத், விந்தியப் பிரதேசம், போபால், அஜ்மீர், திரிபுரா ஆகியவை, சிபாரிசுகளின்படி அமைகிற 16 மாநிலங்களுக்குள் இணைக்கப்பட்டுவிடுவதால், தனியாக இயங்கும் நிலை அற்றுவிடுகின்றன.

சையத் பாசல் அலியைத் தலைவராகவும், சர்தார் கே. எம். பணிக்கர், எச். என். குன்ஸ்ரூ ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட இந்த மூவரடங்கிய மாநில புனரமைப்புக் குழு, கடந்த 1953 டிசம்பர் 23-ந் தேதியன்று இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டதாகும்.

குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள் தென்னாட்டிலும்—வடநாட்டிலுமாகப் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

குழு அமைவதற்கு முன்பும், குழு அமைந்த பின்பும், இந்தியத் துணைக் கண்டத்தின் பல பாகங்களிலும், மொழிவழி மாநில அமைப்பு வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமையாவிட்டால், வரிகொடா இயக்கம் போன்ற பெரும் போராட்டங்கள் நடத்தப்படும் என்று அறைகூவல் தந்திருந்த அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங், குழுவினரின் சிபாரிசுகளைக் கண்டு அதிர்ச்சியுற்றிருப்பதாகத் தெரிகிறது.

சீக்கியரை வேரறுக்க குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர்.

1947-ல் ஏற்பட்ட விபரீதத்தை விடப் பெரிய விபரீதம் ஏற்பட்டுள்ளது என்றும், மாநிலக் குழு அறிக்கை சீக்கிய உலகத்தின் முகத்தையே அழித்துவிடுகிறது என்றும், சீக்கியர் எல்லோரும் ஒன்று திரண்டு இதனை எதிர்க்க வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார் தாராசிங்!

சம்யுக்த மராட்டியம் அமையாவிடில், பெரும் கொந்தளிப்பும் குழப்பமும் ஏற்படும் என சங்கர ராவ் தேவ் எச்சரித்திருக்கிறார்.

★★★

பெல்லாரி மீண்டும் ஆந்திரருக்குத் தரப்பட்டிருப்பது கன்னடியருக்குக் கோபமூட்டியிருப்பதாகத் தெரிகிறது.

திரு-கொச்சியில் உள்ள 9 தமிழ் வட்டங்களில், 5 வட்டங்கள் மட்டுமே தாய்த் தமிழகத்துடன் இணையவும், எஞ்சியவை, புதிய கேரளத்தில் இருக்க வேண்டும் எனவும் குழு சிபாரிசு செய்திருப்பதும் அந்தப் பகுதி மக்களின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஆந்திர, சென்னை மாநிலங்களிடையே உள்ள சித்தூர் எல்லைத் தகராறு, இரு மாநிலங்களின் முடிவுக்குமே விடப்பட்டிருக்கிறது.

விசால ஆந்திரம் அமையாதது—பலருக்கு ஏமாற்றம்தான் என்று தெரிகிறது.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு வானொலி மூலம் இது குறித்துப் பேசுகையில், மக்கள் சிபாரிசுகளைக் குறித்து பரபரப்படையத் தேவை இல்லை எனவும், இந்த சிபாரிசுகள் குறித்து மாநில சட்டசபைகள் விவாதித்த பின்னர், மக்கள் சபைக்குத்தான் முடிவெடுக்கும் அதிகாரமிருப்பதாகவும், சிபாரிசுகளை கண்ணியமாகவும், அமைதியாகவும், முழுவதுமாகவும், ஜனநாயக அடிப்படையிலும் நோக்குமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சிபாரிசுகளில் சில அவருக்கு ஆச்சரியமூட்டியிருக்கிறதாம்!

பல கட்சியினரும் குழுவின் அறிக்கை குறித்துத் தீவிரமாக பரிசீலித்து வருகின்றனர். (4-ம் பக்கம் பார்க்க)

மே. பாகிஸ்தானிலும் வெள்ளம்

பல நகரங்கள் மூழ்கின

லாகூர், அக். 6—

மேற்கு பஞ்சாபில் இதுவரை வெள்ளத்தினால் மாண்டோர் தொகை ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்குமெனவும், ஏராளமான கால்நடைகளும், பயிர்களும் நாசமாயின என்றும் விமான மூலம் வெள்ளத்தைக் கண்ட பாக். பிரதமர் சௌத்ரி முகம்மது அலி தெரிவித்திருக்கிறார்.

வெள்ள நிவாரணத்திற்காக சர்க்கார் ரூ. 50 இலட்சம் மானியம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

லாகூர்—தண்ணீரில் மூழ்கியுள்ளதாம்!

மேற்கு பஞ்சாபில், 6 நகரங்களும், நூற்றுக்கணக்கான கிராமங்களும் வெள்ளப் பிடியில் சிக்கியுள்ளன. லாகூர், தண்ணீரில் மூழ்கியுள்ளது என்று தெரிகிறது.

புதுடில்லி, பஞ்சாப் பகுதிகளில் வெள்ளம்

நூற்றுக்கணக்கானோர் பலியாயினர்

வீடுகளும், கால்நடைகளும் சேதமடைந்தன

அமிருதசரஸ், அக். 9—

அமிருதசரசில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு சுமார் 50 பேர்களைப் பலி கொண்ட பின்னர், இன்று சற்றுத் தணிந்து வருவதாகத் தெரியவருகிறது.

மேலும் கிராமங்களில் சுமார் 100 பேர் வரை வெள்ளத்திற்குப் பலியாகியிருக்கக்கூடுமெனக் கூறப்படுகிறது.

அமிருதசரஸ் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களிலும் 60 சதவிகிதத்திற்கு மேலான வீடுகள் பாழடைந்துள்ளனவாம்.

இப்பகுதிகளில், எல்லாப் பயிர்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதாயும், ஏராளமான கால்நடைகளுக்கும் சேதம் ஏற்பட்டதாயும் தகவல் கிடைத்திருக்கிறது.

★

புதுடில்லி நகருக்குள் யமுனை பாய்ந்தது

புதுடில்லி, அக். 9—

புதுடில்லி நகர் இன்று முதன் முதலாக வெள்ளக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறது.

யமுனை நதியின் வெள்ளப் பெருக்கு முதன் முறையாக புதுடில்லி நகருக்குள் நுழைந்திருக்கிறது.

மதராசாலேயில் புதிதாக அமைந்துள்ள மத்திய 'ரெவினியூ போர்டு' கட்டிடத்திற்குள் முழங்கால் அளவு வெள்ள நீர் புகுந்துள்ளதாகத் தெரிகிறது.

இப்படி, பல சாலைகளிலும் நகரப் பகுதிகளிலும் வெள்ள நீர் புகுந்திருக்கிறதாம்.

சுமார் 80 சதுர மைல் பரப்பளவிற்கு வெள்ளம் பரவியுள்ளது; 40 கிராமங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

புதுடில்லியில் 'ராஜகட்'த்திற்கு அருகே உள்ள மின்சார உற்பத்தி நிலயத்தையும் வெள்ளம் அச்சுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இப்போது, வெள்ளம் சிறிது சிறிதாகத் தணிந்து வருவதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் நேரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமான மூலம் சுற்றிப் பார்த்துவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழு நிவாரணம் அளிக்கப்படும் என்று ஆறுதல் கூறியிருக்கிறார்.

8,000 கால்நடைகள் இறந்தனவாம்!

பெப்சு மாநிலத்தில் இந்தக் கிழமை பெய்த மழையாலும், ஏற்பட்ட வெள்ளத்தாலும், 175 பேர் உயிரிழந்ததாகவும், 8,000 கால்நடைகள் இறந்ததாகவும், அந்த மாநில முதன் மந்திரி பிரிஷ்பன் தெரிவித்திருக்கிறார்.

8,000 வீடுகள் அழிந்துவிட்டனவாம்!

அம்பாலா மாவட்டத்தில் 8,000 வீடுகள் அழிந்துபட்டதாகவும், அதே அளவு வீடுகள் சேதமடைந்தன என்றும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★★★

சென்னை தி.மு. கழகக் கிளைகளுக்கு முக்கிய அறிவிப்பு

★

சென்னை நகரில் நடைபெறவிருக்கும் சட்டசபை இடைத் தேர்தலில் போட்டியிட எண்ணியிருக்கும் ஒருவர், தி. மு. கழகச் சார்பில் அவருக்கு யான் ஆதரவு தந்துள்ளதாகக் கிளைக் கழகங்களுக்குத் தெரிவித்து, அந்நபர் கடிதம் எழுதியிருப்பதாக என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த இடைத் தேர்தலைப் பற்றி தி. மு. கழகம் யாதொரு முடிவும் செய்யவில்லை என்பதும், சட்டசபைத் தேர்தலைப் பொறுத்தவரை தி. மு. கழகக் கொள்கை என்ன என்பது பற்றியும் தி. மு. கழகம் திட்டவட்டமாக ஏற்கனவே அறிவித்திருக்கிறது.

எனவே, அந்த நபரின் போக்கு மிகவும் தவறானதும், கண்டிக்கத்தக்கதும் ஆகுமென்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்வதுடன், இதனை என் கவனத்திற்குக் கொண்டுவந்த 30-வது வட்ட தி. மு. கழகச் செயலாளரிடமும் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

என். வி. நடராசன்,
துணைப்பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—10—'55 திங்கள்

பேசினுல் போதுமா ?

சுற்றிலும் குப்பை மேடு—சாக்கடை—ஓடை இவற்றிற்கிடையே அமைந்துள்ள சேரிகள்—அவற்றில் உள்ள எட்டடிக் குடிலுக்குள், ஏழெட்டு மனிதப் புழுக்கள், தங்கள் எண் சாண் உடம்பை ஒரு சாணுகக் குறுக்கிக் கூனிக்கொண்டு நெளிந்து கொண்டிருக்கும் அவலநிலை, நாடெங்குமுள்ள கிராமங்களில் மட்டுமின்றி, சென்னை போன்ற பெரிய நகரங்களிலும் பரந்து விரிந்து நிலவி வருகிறது.

சேரிகள் என்றழைக்கப்படும் அந்தக் குடியிருப்புகளில், தங்களைப்போன்ற மனிதர்களை வசிக்கச் செய்திருப்பது, ஒரு நாட்டவரின் மனிதத்தன்மை அற்ற நிலையை எடுத்துக்காட்டுவதாக மட்டுமின்றி, அந்த நாட்டவருக்கென அமைந்துள்ளதாகக் கூறப்படும் சர்க்காரின் கையாலாகாத்தனத்திற்கு எடுத்துக்காட்டுகளாகவும் விளங்குகின்றன என்ருல் மிகையாகாது.

ஓட்டைக் கூரையிலிருந்து ஒழுகும் மழை நீர் கரைத்தது போக எஞ்சும் மண் சுவரேனும், இந்தச் சேரிகளில் உள்ள குடிசைகளுக்கு 'மறைவு'களாக அமைந்திருக்கின்றன. ஆனல், அந்த 'மறைவு'களே இல்லாது, நடைபாதைகளிலும் வீதி ஓரங்களிலும் சாக்கடை ஓடையருகிலும் சட்டிபானை வைத்துப் பொங்கி, உண்டு குடித்தனம் நடத்தும் 'மன்னர்கள்' ஏராளம் ஏராளம்.

இந்தக் கொடிய நிலை சுதந்திர வீரர்கள் என்று தங்களைத் தபட்டமடித்துக் கொள்ளும் காங்கிரஸ் ஆட்சியாளரால் கடந்த எட்டாண்டுக் காலத்தில் மாற்றப்படவில்லை. இந்த அவல நிலை மாறவேண்டுமென்பதில் அவர்களுக்கு உணர்வு பூர்வமான நல்லெண்ணம் இருப்பதாகவும் கூறுவதற்கில்லை.

பொதுவாகவே, நாட்டு மக்களில் பெரும்பான்மையினரான ஏழை எளிய மக்களுக்கு வாழ்வு தரவும், அவர்களது வாழ்வின் தரத்தை உயர்த்தவும், இந்த எட்டாண்டு காலத்தில் காங்கிரசாரால் முடியாமற்போனதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான், சேரிகள், சேரிகளாகவே—பழைய நிலையிலேயே நீடித்துக்கொண்டிருப்பதற்கும் காரணமாகக் கூறப்படவேண்டியிருக்கும்.

'சமூக நலத் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள், கிராம புனருத்தாரணத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள்' என்று, திட்டங்களின் எண்ணிக்கையை வளர்த்துக் காட்டி, இத்தனை வகைவகையான திட்டங்கள் தீட்டியிருக்கிரோம்; அமுல்செய்துவருகிரோம்' என்று மந்திரிகள் பலரும் ஆங்காங்கே பேசி வருகின்றனர். ஆனல் நிலை என்னவோ கிஞ்சிற்றும் மாறக்காணோம்.

கல்லூரி மாணவர்கள் முகாம் செய்தனர்; சீரழிந்திருந்த ஓலைக் குடிசைகளை சீர் செய்தனர்; தெருக்களைச் சுத்தம் செய்தனர்.

'அவர்களுக்கு நாங்கள் என்ன மட்டமா?' என்று கேட்கின்ற வகையில் கல்லூரி மாணவிகளும் இந்த 'சமூக சேவை'யில் தீவிர அக்கரை காட்டிவருகின்றனர். கிராமத்தில் வாழும் குழந்தைகளை எல்லாம் கூட்டி, குளிப்பாட்டி சீவி முடித்து, அலங்காரம் செய்வித்து, அணிவகுப்பு நடத்தினர் மாணவிகள். 'என்னே அவர்கள் சேவை!' என்று அதிகாரி பாராட்டினர் — இப்படி செய்திகள் வருகின்றன. சர்க்கார் இந்தச் செய்திகளை அறிவித்தே, தாங்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடும் முறையை வெளிக்காட்ட முற்படுகின்றனர். எங்கோ ஒரு கிராமத்தில் என்ருே ஓர் நாள் மாணவர்கள் முகாம் செய்து பணி புரிவதினலேயே, நாட்டு மக்களின் அவலநிலை மாற்றப்பட்டுவிட்டதாக எவரும் கருதிவிட முடியாது.

மாணவர்கள், ஒருநாளைக்குச் சேர்ந்த குப்பை கூளங்களைக் கூட்டிச் சேர்த்து கொளுத்திவிட்டு வந்திருப்பர். மறு நாளைக்கு சேரிகளைச் சுற்றி குப்பை சேராமலிருந்துவிடுமா? மாணவிகள் ஒரு நாளைக்கு சேரிக் குழந்தைகளை சிங்காரித்து மகிழ்ந்துவிட்டுத் திரும்புவர். மறுநாள் அந்தக் குழந்தைகளை எவர் கவனிப்பர்? கவனிக்கவேண்டிய பொறுப்புடைய பெற்ருேர் குழந்தைகளின் கும்பி கழுவவே முடியாத நிலையிலிருக்கும்போது, சீவிமுடித்து சிங்காரித்துவிடும் நிலையிலா இருக்கின்றனர்?

பொதுவாக ஏழை எளிய மக்களுக்கு முழு வாழ்வுதர முடியாதவர்களாய்தான் இன்றைய காங்கிரஸ் ஆளவந்தார்கள் இருக்கின்றனர் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள ஆராய்ச்சி நடத்தத் தேவை இல்லை; நாடு நகரெங்கும், நல்லவர் உள்ளத்தை உருக்கி கண்ணீர் உகுக்கச் செய்து கொண்டிருக்கும் சேரிகள் என்ற குடியிருப்புகளும், 'நடைபாதை விடுகளும்' போதுமானவையாகும்.

சேரிகளை நல்ல பாதுகாப்பும் சுகாதார வசதிகளும் உடைய குடியிருப்புகளாக மாற்ற கையாலாகாத காங்கிரஸ் சர்க்கார், அந்தச் சேரிகளில் 'வாழ்'வோரைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கின்றனரோ நமக்குத் தெரியவில்லை.

அண்மையில் பெங்களூர் நகரில் சேரிகளைப் பற்றிப் பேசிய இந்தியப் பிரதமர் பண்டித நேரு, சேரிகளின் கொடூரக் காட்சிகளைத் தன்னல் சகித்துக் கொள்ள இயலவில்லை என்று உளம் கசிந்துருகியதுபோலப் பேசியிருக்கிருர்.

கொடூரக் காட்சியை சகித்துக்கொள்ள முடியவில்லையாம்—பிரதமராயிருப்பவர் கூறுகிருர். இவர்தான் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும் பொறுப்புமிக்க சர்க்காரின் தலைவராயிருக்கிருர். சகிக்க முடியாத காட்சி மாற இவரது ஆட்சிபீடம் இந்த எட்டாண்டுக் காலத்தில் செய்தது என்ன?

இரண்டு மாதங்கள்முன், உதவி உள்நாட்டு மந்திரி தத்தார் என்பார் வந்தார். சென்னை நகரில் உள்ள சேரிகளைப் பார்த்துவிட்டு 'படுமோசம்; திட்டம் தீட்டி அனுப்புங்கள், இந்த நிலை மாற்ற' என்ருர்! திட்டமும் தீட்டி அனுப்பினர்—சென்னை நகர சபையினர். என்ன ஆயிற்று அந்தத் திட்டம் என்ற தகவலே காணேம்.

இது நிலை. ஆனல் சகிக்க முடியவில்லையாம், அருவருக்கத் தக்கவையாயிருக்கின்றனவாம்—பேசுகிருர், பிரதமர்.

பிரதமராயிருப்பவர் பேசுவதில் பயன் என்ன? பேசிவிட்டால் மட்டும் போதுமா? அந்த நிலை மாறச் செயலாற்ற வேண்டாமா? என்றுதானே மக்கள் கேட்பர்.

கேட்டுப் பயன் என்ன? பண்டிதரும் அவரது சக ஆளவந்தார்களும், சேரிகளில் வாழ்கிருேம என்ற பெயரில் செத்துக் கொண்டிருப்பவர்களும் நம்மைப்போன்ற உணர்வும், உள்ளமும் படைத்த மனிதர்கள்தான் என்ற எண்ணம் பெற்ருல் அல்லவா செயலாற்ற முனைவர்? அந்த எண்ணத்தை கடன் வாங்க வேண்டிய நிலையில்தானே காங்கிரஸ் ஆளவந்தார்கள் இருக்கின்றனா.

மாணவரிடை ஒழுங்கீனம்

பண்டித நேருவுக்கு டாக்டர் இலட்சுமணசாமி பதில்

சென்னை, அக். 7—

"இந்தியாவில் மாணவர்களின் நடத்தையும் ஒழுக்கமும் கேடுற்று இருப்பதாக பண்டித நேரு குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவித்திருக்கிருர். ஆனல், இந்தியாவின் இந்தப் பகுதி (தென்னுடு) மாணவர்களின் ஒழுக்கமும், நடத்தையும் என்னைக் கவர்ந்திருக்கின்றன; கடந்த 14 ஆண்டுகளாக நான், துணைவேந்தராயிருக்கும் காலத்தில் ஒருமுறைகூட—மறைமுகமாகவேனும்—நான், மாணவர்கள் ஒழுங்கீனமாக நடந்துகோண்டனர் என்று கண்டிக்கிற சந்தர்ப்பம் பெறவில்லை. இந்தப் பகுதி மாணவர்கள்—குறிப்பாக சென்னை பல்கலைக் கழக மாணவர்களின் ஒழுக்கமும், நடத்தையும் பாராட்டுதலுக்குரியன;

"இந்தியாவின் இதர பகுதி மாணவர்களின் சமீபகாலத்திய நடத்தை வருந்தற்குரியது. அதற்கான காரணங்களை ஆராய்ந்து கண்டறிந்து, மேலும் மாணவர்களிடையே ஒழுங்கீனம் பரவாமல் தடுப்பது அவசியம்,"

—என்று, சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள், வடசென்னை தியாகராயர் கல்லூரியில், கல்லூரியை நிறுவிய பி. இராமசாமியின் உருவச் சிலை ஒன்றைத் திறந்து வைக்கும்போது பேசியிருக்கிருர்.

மேலும் அவர் சொன்னதாவது :—

"கல்வியின் தரம் குறைந்துவிட்டதாக பண்டித நேரு வருத்தப்பட்டிருக்கிருர். எப்படிக் குறையாமல் இருக்கும்?

"கேள்வித்தாள்கள் பற்றி பத்திரிகையில் கண்டனம் வருகிறது; ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்குச் சர்க்கார் பரீட்சை வைப்பது தீங்கு என்று கண்டிக்கிருேம்; பட்டப் படிப்புக்குப் படிப்பவர்கூட அவரவர்கள் கல்லூரியிலேயே பரீட்சை எழுதினல் போதும் என்று கூறுகிருேம்; ஒரு நாளைக்கு இரண்டு கேள்வித் தாள்களுக்குப் பதில் தருவது மாணவர்களுக்கு கஷ்டமாயிருக்கும் என்கிருேம்; ஒவ்வொரு பரீட்சையும், ஆண்டுக்கு இருமுறை நடத்த வேண்டும் என்கிருேம்; மாணவர்கள் பகுதி பகுதியாக பரீட்சை எழுதி தேறலாம் என்று பேசுகிருேம். நாம் இப்படியெல்லாம் பேசுவதினல், மாணவர்களிடை ஏற்படும் கல்வித் தரக்குறைவிற்கு எத்தனை பொறுப்பாளிகளாயிருக்கிருேம் என்பதை உணரவேண்டாமா? ஆதலால் தரக்குறைவிற்கு மாணவர்கள் பொறுப்பாகின்றனரா? நாம் பொறுப்பாளிகளா?"

'செகண்டரி' கல்வி புதிய திருத்தம்

டாக்டர் லட்சுமணசாமி விளக்கம்

சென்னை—

'செகண்டரி' கல்வி முறையில் மாறுதல் செய்யவேண்டுமென்பதற்காக, இப்போதைய மாறுதல் செய்யப்படவில்லை; நாட்டுக்கு சேவை செய்ய இக்கல்வி முறை அதிகம் உபயோககரமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் மாற்றங்களை மேற்கொண்டோம்; புதிய திட்ட அமுலின் காரணமாக, ஆசிரியர்கள் குறைக்கப்பட மாட்டார்கள்." என்று டாக்டர் லட்சுமணசாமி, தியாகராயக் கல்லூரியில் பேசகையில் குறிப்பிட்டார்.

ஆலைத் தொழிலாளருக்கு 'போனஸ்'

கோவை, அக். 7—

கோவை மாவட்டத்தில் உள்ள 40 துணி ஆலைகளில் பணிபுரியும் 37 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் 1954-ம் ஆண்டுக்கான 'போனஸ்' இந்த் ஆண்டு நவம்பர் திங்கள் துவக்கத்தில் கிடைத்துவிடும் என்று தெரிகிறது.

தொழிலாளர், முதலாளிகள் பிரதிநிதிகள், 1954-க்கு போனஸ் நிர்ணயம் செய்ய கட்டாய மத்தியஸ்த 'போர்டு' அமைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

'போர்டு' வரும் அக்டோபர் 20-ந் தேதி சென்னையில் கூடி இருதரப்புக் கருத்துக்களையும் அறிந்து, அக்டோபர் 29-ந் தேதி முடிவு கூறுவர் என்று தெரிகிறது

எகிப்திற்கு ரஷ்ய விமானங்கள்!

எகிப்து இராணுவத்திற்கு ரஷ்யா, 'மிக்' ரக விமானங்களை அனுப்பித்தரும் என்று பிரதமர் நாசர் அறிவித்திருக்கிருராம்.

இந்தோனேஷியாவில் முதல் பொதுத் தேர்தல்

கட்சிகளின் நிலவரம்

ஜாகர்தா, அக். 9—

இந்தோனேஷியாவில் சுதந்திரம் பெற்ற பிறகு முதல் பொதுத் தேர்தல்கள் சென்ற கிழமை முடிந்து, முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்தோனேஷிய பிரதிநிதி சபைக்கு 260 இடங்கள் உண்டு. ஆச்சரியம் என்னவென்ருல், அந்த நாட்டில் மொத்தம் 260 கட்சிகளும் (பல பெயரளவில் கட்சிகளாயிருப்பவை) இருக்கின்றன.

தேர்தலில் முக்கியமாக கருதப்படவேண்டிய கட்சிகள் நான்குதான். தேசியக் கட்சி, மஸ்ஜுமி கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, சோஷலிஸ்டு கட்சி.

சமீப காலம் வரை தேசியக் கட்சியே ஆட்சியில் இருந்தது அந்தக் கட்சி அமைத்திருந்த கூட்டு மந்திரிசபைக்கு கம்யூனிஸ்டுகளின் ஆதரவு இருந்தது. பிரதமராக அலி சஸ்திரேமித் ஜோஜோ இருந்து வந்தார்.

தேசியக் கட்சியினர் உள்நாட்டு விவகாரங்களில் 'இடதுசாரி'களாகவும், வெளிநாட்டு விவகாரங்களில், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய எந்த வல்லரசு கோஷ்டியிலும் சேராத நடுநிலை வகிக்கும் கொள்கையுடையவர்களென்றும் கூறப்படுகிறது.

100-க்கு 95 சத விகிதத்தினர் முஸ்லீம்களாயிருக்கும்போது, 'மஸ்ஜுமி' என்ற கட்சியை, முஸ்லீம்கள் கட்சி என்று சொல்லுவதில் ஆச்சரியமேதுமில்லை.

இவர்கள் உள்நாட்டு விவகாரங்களில் வலதுசாரிகளாகவும், வெளிநாட்டுவிவகாரங்களில் அமெரிக்கா, பிரிட்டன் இவற்றுடன் இணங்கிப் போகவும் வேண்டுமென விரும்புபவர்கள்.

சோஷலிஸ்டுக்கட்சியினர் இடதுசாரிகள் என்ருலும், கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பவர்களாயிருக்கின்றனர். மேலும், வெளிநாட்டுக் கொள்கையில் 'மஸ்ஜுமி' கட்சியின் கொள்கையை ஒத்தவர்கள்.

நான்காவதான கம்யூனிஸ்டு கட்சியினரின் கொள்கை தெரிந்ததே.

இவர்கள் முன்பு தேசியக் கட்சியினரை ஆதரித்து வந்ததும், பின், அந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டதினல்தான் அலி சாஸ்திரோமித் ஜோஜோ மந்திரி சபை கவிழ்ந்து, 'மஸ்ஜுமி' கட்சியைச் சேர்ந்த ஹாராஹப் பதவிக்கு வந்தார் என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

இதுவரை வெளிவந்துள்ள முடிவுகளின்படி எல்லாக் கட்சிகளுக்கும் ஏறத்தாழ சமபலமே கிடைத்திருக்கிறது என்றும் தெரிகிறது.

குடைத் துணி ஏற்றுமதி!

பம்பாய், அக். 9—

இந்தியப் பேரரசு, 9,57,000 கெஜம் நடுத்தர ரகக் குடைத் துணியை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிப்பர் என்றும் தெரிகிறது.

'எல்லா ஏற்றுமதியாளரும், ஆலைகளும் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; அனுமதி கோருபவர்களின் வரிசைக் கிரமப்படி அனுமதி வழங்கப்படும் 'லைசென்ஸ்' பெற்றவர்கள் டிசம்பர் திங்கள் இறுதிக்குள் ஏற்றுமதி செய்ய வேண்டும்,' என்று, சர்க்கார் அறிவித்துள்ளனராம்.

சோளம் ஏற்றுமதிக்கு அனுமதி!

பம்பாய் அக். 7—

எந்த ஒரு தனிப்பட்ட ஏற்றுமதியாளரும 500 டன்னுக்கு அதிகப்படாமல் சோளம் ஏறறுமதி செய்ய அனுமதிக்கப்படுவார்கள என்று, ஏற்றுமதி கூட்டுத் தலைமை அதிகாரி அலுவலக அறிக்கை ஒன்று கூறுகிறது. இது உடனடியாக அமுலுக்கு வரும். டிசம்பர் திங்கள் முடிய அல்லது உயர்ந்த பட்ச எல்லையை அடையும் வரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்படுமாம்.

பிரெஞ்சு அரசியல் நெருக்கடி!

மொராக்கோவில் மீண்டும் இரத்த வெள்ளமா?

லண்டன், அக். 9—

இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின், அடிக்கடி மந்திரி சபைகளின் வீழ்ச்சிக்கு நிலைக்களனாய் இருப்பது, பிரான்ஸ் நாடு என்று சொன்னால் அது மிகையாகாது.

அந்த நாட்டு அரசியல்வாதிகளும், பிறநாட்டு மக்களின் மீது தங்களுக்குள்ள ஆதிக்கப் பிடிப்பை கௌரவமாக விட்டுக்கொடுக்க மனம் இல்லை; ஆனாலும் அடிமைப்பட்ட மக்களின் விடுதலைக் கிளர்ச்சி வலுக்கும்போது—புரட்சிப் புயல் வீசும்போது தத்தளிக்கின்றனர்; தவிக்கின்றனர். மந்திரி சபைகள் வீழுகின்றன; மீண்டும் புதியவை எழுகின்றன. ஆனாலும், பல்வேறு வகையான அந்த நாட்டு அரசியல்வாதிகளின் நிலையில்லா மனம் ஒருநிலைப்பட மறுப்பதாகவே தெரிகிறது.

மென்டே பிரான்சின் மந்திரி சபை வீழ்ந்து, எட்கார் பாரே தலைமையில் புதிய மந்திரி சபை அமைந்து எழு திங்கள்தான் ஆகின்றது. அதற்குள் அதற்குத் 'தலைவலி' கண்டிருக்கிறது.

நேற்று முன் தினம், அவர் தனது மந்திரி சபையிலிருந்து மூன்று டிகால் கட்சியைச் சேர்ந்த மந்திரிகளைப் பதவி நீக்கம் செய்தார். காரணம், அவர்கள் மொராக்கோவிற்கு வழங்குவதற்கென பிரதமர் பாரே மேற் கொண்ட அரசியல் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ள மறுத்ததுதான்.

இதைத் தொடர்ந்து பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது

நிலைமைகள் பற்றி தேசிய சட்ட சபையில் விவாதத்தைத் துவக்கி வைத்து அவர் குறிப்பிட்டதாவது:—

"மொராக்கோ சம்பந்தமாக மக்கள் சபை ஒரு முடிவு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்; எனது திட்டத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது; எனது திட்டத்தின் மூலம், பிரான்சிற்கும், மொராக்கோ மக்களுக்கும் சிறந்த நட்பு ஏற்படும் என்று நம்புகிறேன்.

"நான் விலக்கியுள்ள மந்திரிகள் பதவிகளை 'ராஜினாமா' செய்ய வேண்டும்.

"மொராக்கோவிற்கு சுயாட்சி வழங்கும் எனது தாராளப் போக்கான கொள்கைகளை அந்த மந்திரிகள் ஒப்புக்கொள்ளவேண்டும்; அல்லது கண்மூடித்தனமாக பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டும்.

"மொராக்கோவிற்கு சுயாட்சி வழங்கவேண்டுவது மிக அவசியமாகும்; அங்குள்ள மக்களின் தேசிய அபிலாஷைகளை அங்கீகரிக்க வேண்டுவது இன்றியமையாததாகும்."

★

மீண்டும்இரத்தவெள்ளமா?

பாரிஸ், அக். 9—

பிரெஞ்சுத் துருப்புகள், மொராக்கோ 'கலகவாதி'களை அடக்கிக் கொண்டிருப்பதாகவும், மொராக்கோவிற்கு அரசியல் சீர்திருத்தங்கள் விரைவில் கிடைக்காவிடின்; பெரும் சண்டை பரவலாகத் தோன்றக்கூடும் என்றும், தற்போது கெய்ரோவில் உள்ள ரீப் மலைப் பகுதியைச் சேர்ந்த வீரர் அப்துல் கரீம் குறிப்பிட்டிருக்கிறாராம்.

பாலாறு நீர்த் தகராறு

சென்னை, அக். 7—

பாலாறு நீரைப் பகிர்ந்துகொள்வது சம்பந்தமாக, மைசூர் சர்க்காரிடமிருந்து முதன் முதலாக, சென்னை சர்க்காருக்கு முழு விவரங்களடங்கிய அறிக்கை ஒன்று கிடைத்திருப்பதாக, பொது மராமத்து இலாகா மந்திரி சேதுபதி தெரிவித்திருக்கிறார்.

வெல்லம் தயாரிப்பதற்குக் கையாளப்படும் பண்படாத பழைய முறைகளையும், நவீன முறைகளையும் திரைப் படமாகப் பிடிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாம். இப்படம், ஆராய்ச்சிகளின் பலன்களைக் கரும்பு உற்பத்தியாளருக்கு எடுத்துரைப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

நிலமில்லாத தொழிலாளர் நிலை

விசாரணைக் குழு அமைப்பு

ஆமதாபாத், அக். 7—

"முதல் ஐந்தாண்டுத் திட்டம், இதர அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் தெளிவாகத் தெரியும் விளைவுகளைக் குறித்து அறிந்து கொள்வதற்காக, நிலமில்லாத தொழிலாளர்களின் வாழ்க்கைநிலை பற்றி ஆராய ஒரு குழு நியமித்து, இந்தியப் பேரரசு உத்தரவு பிறப்பித்துள்ளது," என்று, இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா மந்திரி கந்துபாய் தேசாய், இங்கு தெரிவித்திருக்கிறார்.

நிலமில்லாத தொழிலாளர், மக்கள் தொகையில் தொடர்ந்து 22 சதவிகிதத்திற்கு அதிகமாகவே இருந்து வருகின்றனர் என்றும், அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 160 நாட்களுக்குத்தான் பலன் தரும் வேலை கிடைப்பதாயும், தேசிய வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 287 ஆக இருக்கும்போது, அவர்களின் வருமானம் ரூ. 160 ஆக மட்டுமே இருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

வைரங்கள் செதுக்கும் தொழிற்சாலைகள்

1954-ம் ஆண்டில், இந்தியாவில் வைரம் செதுக்கும் வேலையில் மொத்தம் 20 தொழிற்சாலைகள் ஈடுபட்டிருந்தன; இவற்றில் மொத்தம் 260 பேர் வேலை பார்த்துவந்தனர். இத்தொழிற்சாலைகள் சென்னை மாநிலத்தில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

ஆந்திர தொழிலாளர்களுக்கு அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

18,000 பேர் பயன் பெறுவர்

விசாகப்பட்டினம், அக். 7—

ஆந்திர மாநிலத்தின் முக்கியமான தொழில் நகரங்களான விசாகப்பட்டினம், நெல்லிமார்லா, சிட்டிவால்சா, ஏலூரு, விஜயவாடா, மங்களகிரி, குண்டூர் ஆகிய நகரங்களில், தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தினை, மத்திய தொழிலாளர் இலாகா உதவி மந்திரி அபீத் அலி ஜாபர் பாய் நேற்று துவக்கிவைத்திருக்கிறார்.

இந்த திட்டத்தின் கீழ் சுமார் 18,000 தொழிலாளர்கள் இன்சூர் செய்யப்படுவர்.

'புதிது புதிதாக சேரிகள் முளைப்பது ஏன்?'

பிறர் மீது குற்றஞ் சுமத்தும் பண்டிதரின் ஆத்திரப் பேச்சு!

பெங்களூர், அக். 6—

"நாடோடிகளைப் போல மக்கள் திறந்த வெளிகளில் வாழ்வதைப் பற்றிக்கூட நான் கவலைப்பட மாட்டேன்; ஆனால், ஆபாசமான இடங்களில் வாழ்வதை நான் பொறுத்துக்கொள்ள இயலாது; ஆபாசம் எங்கிருந்தாலும் —அது நகரங்களிலேயோ, கட்டிடங்களிலேயோ, மனிதர்களின் நடத்தையிலேயோ—ஆபாசம் இருப்பதை நான் சகித்துக் கொள்ள இயலாது; ஏற்கனவே உள்ள 'சேரி'கள் பரம்பரையாக வந்தவையாயிருக்கலாம்; அவற்றைச் சீர்திருத்தி, சுகாதார முறைப்படி அமைப்பது மிக அவசியம்; ஆனால், புதிய புதிய சேரிகள் முளைப்பது ஏன்?

"தொழில் அபிவிருத்தி ஏற்படுவது சேரிகள் அமைவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது; தொழில் விரிவு ஏற்பட்டால், சம்மந்தப்பட்ட தொழில் அதிபர்கள் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தேவையானவசதிகளைச் செய்து தரவேண்டிய பொறுப்புடையவர்கள்;

"சேரிகள் நகரங்களின் அழகையே கெடுத்து விடுகின்றன,"

—இவ்வாறு, பண்டித நேரு, இங்கு நகர சபைக்கான புதிய கட்டிடத்திற்குக் கால்கோள் விழா நடத்தி வைக்கும்போது குறிப்பிட்டாராம்!

ரஷ்யாவிற்கு டல்லஸ் செல்கை!

வாஷிங்டன், அக். 7—

ரஷ்யாவிற்கு வருகை தருமாறு, அமெரிக்க இராஜாங்க இலாகா மந்திரி ஜான் டல்லசுக்கு உத்தியோகப்பற்றற்ற முறையில் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்து கருத்தறிவிக்க அமெரிக்க இராஜாங்க இலாகாவினர் மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

ஜெர்மனி ஐக்கியம்

ரஷ்யாவிற்கு பிரிட்டன் உறுதி

போர்ன்மவுத், அக். 7—

"இந்தத் திங்களில் ஜினீவாவில் நடைபெறவிருக்கும் நான்கு அயல் நாட்டு மந்திரிகள் மாநாட்டில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் ரஷ்யாவின் கருத்துக்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்;

"கடந்த யுத்தத்தில் ரஷ்யாவே ஜெர்மானியரால் மிகவும் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாயிற்று என்பது குறிப்பிடத் தகுந்தது"

என்று, கன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் பேசுகையில் பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி மாக்மில்லன் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஜெர்மனி ஒன்றுபட்ட பின்னர், ரஷ்யாவின் பாதுகாப்புக்கு சட்டபூர்வமான உத்திரவாதங்களை நடைமுறையில் அமுல் செய்யும் பொருட்டு, மேலை நாடுகள் ஐரோப்பாவில் நிறுத்திவைத்திருக்கும் படைகளை தகுந்த முறையில் இடம் மாற்றுவதற்குத் தயாராகியிருப்பர்;

"ஜெர்மனி ஐக்கியப்பட்ட பின்னர் நேட்டோவில் சேர்ந்தாலும் நடுநிலைமை வகித்தாலும், ரஷ்யாவைத் தாக்காமலிருப்பதற்குத் தகுந்த பாதுகாப்பு ரஷ்யாவிற்குத் தர வேண்டுவது அவசியம்."

அணுசக்தி 'ஏஜென்சி'

ஐ. நா. பொதுச் சபைக்குப் பொறுப்பானதாயிருக்க வேண்டும்

நியூயார்க், அக். 7—

அணுசக்தியை சமாதான காரியங்களுக்காகப் பயன்படுத்துவதற்காக, அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அணுசக்தி 'ஏஜென்சி', ஐ. நா. பொதுச் சபைக்கு பொறுப்புடையதாயிருக்கவேண்டும் என்று, ஐ. நா. அரசியல் குழுவில் இந்தியா யோசனை ஒன்றைத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

கழகச் செய்திகள்

மேலூர் தி. மு. கழகம்

செங்கற்பட்டு மாவட்டம், மேலூர் தி. மு. கழகச் சார்பில் 2—10—55 மாலை 6 மணிக்கு மண்ணடி திடலில் தோழர் புனிதம் குணசீலன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராதாமணாளன், வி. எஸ். மணி, ஆ. கிருஷ்ணன் ஆகியோர் கழகக் கொள்கையை விளக்கிப் பேசிய பின், தோழர் கண்ணதாசன் வடநாடு—தென்னாடு ஆகியவைகளின் பண்பாடுகளின் வேறுபாடுகளை விளக்கிப் பேசினார்.

பின்னர் தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்திப் பேசினார்.

கிளைக் கழகச் சார்பில், செயலாளர் சண்முகம் ரூ. 25 கொண்ட பணமுடிப்பை, மாநில மாநாட்டு நிதிக்கென துணைப் பொதுச் செயலாளரிடம் அளித்தார்.

மேலூர் தி. மு. கழகத்தின் முயற்சிக்குத் துணைப் பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

இக்கூட்டத்தை நடக்கவொட்டாமல் துவக்கத்திலிருந்தே சில காங்கிரஸ்காரர்கள் முயன்று பார்த்துத் தோல்வியடைந்ததால், கூட்டம் இனிது முடிவுற்றதற்குப் பின்பு கற்களை வீசி ஒலிபெருக்கியைப் பாழ்படுத்தினர்.

இதை, கழகத் தோழர்கள் போலீசாருக்கு அறிவித்து, தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கும்மிடிபூண்டி தி. மு. க.

23—9—55ல், தோழர் ஆ. கிருஷ்ணன் தலைமையில் தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, நாட்டுப் பிரிவினை நாள் விழாப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

செயற்குழுக் கூட்டம்

1—10—55ல், கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் செயற்குழுவிலிருந்து இருவரை விலக்கியும், இரண்டு தோழர்களைப் புதிதாகச் செயற்குழுவில் சேர்த்துக் கொண்டும், மற்றும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மாயூரத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

2—10—55 மாலை 6 மணிக்கு, காட்டுச்சேரி தி. மு. கிளைக் கழகச் சார்பில், தோழர் இரும்பத்துரை தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் வி. எ. பாண்டியன், நாகை—பாண்டியன், என். கிட்டப்பா ஆகியோர் தி. மு. கழகக் கொள்கையினை விளக்கியும், கழக வளர்ச்சி பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர்—சீராமபுரம் தி. மு. கழகம்

2—10—55 காலை 11 மணிக்கு தோழர் சு. கண்ணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இத்திங்கள் 26-ம் தேதி, உறுப்பினர்கள் கூட்டம் கூட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சேலம் 30-வது வட்ட தி. மு. கிளைக் கழகம்

2—10—55 இரவு 9 மணியளவில், சேலம் 30-வது வட்ட கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் அ. சன்ராசு தலைமையில் நடைபெற்றபோது, நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், சேலம் நகரசபைத் தேர்தலில், எக்கட்சி அபேட்சகரையும் ஆதரித்து வேலை செய்வதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

மதுராந்தகம் தி.மு. கழகம்

மதுராந்தகம் தி. மு. கழகச் செயற் குழு கூட்டம், 11—9—55 காலை 9 மணிக்கு தோழர் எம். எம். ராசாபாதர் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஏ. எஸ். இமயவரம்பன் கழக ஆக்க வேலைகளில் ஈடுபடாததால், புதிய செயலாளரைத் தேர்ந்தெடுப்பதென முடிவு செய்யப்பட்டு, தோழர் பி. சிவானந்தம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைச் செயலாளராகத் தோழர் ஏ. சண்முகம் அவர்களே தொடர்ந்து பணியாற்றுமாறும் தீர்மானிக்கப்பட்டது.

இயந்திரக் கருவி என்றால் என்ன?

ஒரு விளக்கம்

இந்தியா, தொழில் மயமாவதற்கான முற்போக்குப் பாதையில், ஒரு முக்கிய கட்டத்தைத் தாண்டுகிறது.

பெங்களூரில் நிறுவப்பட்டுள்ள இந்துஸ்தான் இயந்திரக் கருவித் தொழிற்சாலையை, பிரதமர் நேரு, 6-ந் தேதியன்று துவக்கிவைத்தார்.

பெங்களூரிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள ஜலஹல்லியில் இத்தொழிற்சாலை உள்ளது; 380 ஏக்கரா பரப்பளவுள்ள நிலம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இயந்திர யுகத்தின் நவீன கால வேலைகளுக்கு இயந்திரக் கருவிகள் இன்றியமையாதனவாகும். தற்காலத் தொழில் துறைகளுக்கு இதுதான் அடிப்படையாகும்.

தற்கால நாகரீகச் சாதனங்கள் எல்லாம், இயந்திரக் கருவிகளால் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

'இயந்திரக் கருவி' என்றால் என்ன?

உலோகத்தைச் சிறிது சிறிதாகச் செதுக்கிக் குறைப்பதற்கு உபயோகிக்கப்படுகிற 'விசை இயக்க' இயந்திரம்தான் 'இயந்திரக் கருவி' என்று குறிப்பிடப்படுகிறது.

கடைசல் வேலைக் கருவிதான் இயந்திரக் கருவி.

மூலசாதனங்களையோ, உருக்கு, வார்ப்படம் போன்ற ஓரளவு வேலை தீர்ந்த சாதனங்களையோ வேலைமுறைக்கு உட்படுத்தி, துல்லியமாய் உருவம் கொடுத்து, வேண்டிய பொருள்களைத் தயாரிப்பதுதான் இயந்திரக் கருவி.

அவசியமில்லாத உலோகப் பகுதிகள், இதன் மூலம் செதுக்கித் தள்ளி விடப்படுகிறது.

நவீன நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுகிற பல சாதனங்கள் எல்லாம் இந்தக் கருவியின் உதவியால்தான் செய்யப்படுகின்றன. உதாரணமாக, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கான விவசாயக் கருவிகள், துணி உற்பத்தியைப் பெருக்குவதற்கான நெசவாலைக் கருவிகள், எஞ்சின்கள், ரயில் வண்டி வாகனங்கள், கப்பல்கள், விமானங்கள், மோட்டார்கள், செய்திப் போக்குவரத்துக்கு அவசியமான படைக்கலன்கள் ஆகியவை, இயந்திரக் கருவிகள் மூலமே தயாராகின்றன.

எனவே, இந்த வேலை, 'வெகு நுட்பமானது' என்பது தெளிவு. அந்த வேலைக்கு உதவுகிற இயந்திரம், அதனினும் அதிக நுட்பத்துடன் அமையவேண்டும்.

இவ்வளவு அதிநுட்பமாக அமைந்துள்ள கடைசல் வேலைக் கருவியே 'இயந்திரக் கருவி' என்று கூறப்பட்டு வருகிறது.

புதிய மாநில எல்லைக்கோடுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் சிபாரிசுகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

சென்னை :

இந்த மாநிலம் கீழே கூறப்பட்டுள்ள மாறுதலுக்குட்பட்டு, தற்போதுள்ள பிரதேசங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும். அந்த மாறுதல்களாவன :—

(அ) தற்போது திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்துவரும் அகஸ்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவன்கோடு, செங்கோட்டை ஆகிய ஐந்து தாலுகாக்களும் சென்னை மாநிலத்திற்கு மாற்றப்பட வேண்டும் ;

(ஆ) மலபார், தென் கன்னடம் மாவட்டங்களும், கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள கொள்ளேகாலம் தாலுகாவும் சென்னை மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட ஐந்து தாலுகாக்களையும் சென்னையுடன் சேர்ப்பதானது, பூமி அமைப்புத் தொடர்ச்சி காரணமாகவும், மொழி, கலாச்சாரத் தொடர்புகள் காரணமாகவும் நியாயமானதாகும். அந்தப் பிரதேசவாசிகள் தெளிவாக வெளியிட்டுவந்துள்ள கோரிக்கையையும் இது பூர்த்தி செய்து வைப்பதாக இருக்கும்.

கேரளம் :

புதிதாக அமைக்கப்படும் கேரள மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் அடங்கியதாக இருக்கவேண்டும்:—

(அ) சென்னைக்கு மாற்றி விட உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து தாலுகாக்கள் நீங்கலாக, தற்போதுள்ள திருவாங்கூர்-கொச்சி மாநிலம் ;

(ஆ) மலபார் மாவட்டம் (கொச்சின் கோட்டையும் லட்சத் தீவுகளும் உட்பட்டது), தென் கன்னடம் மாவட்டத்திலுள்ள காசர்கோடு தாலுகா, அமின்டிவ் தீவுகள் ஆகியவை.

கர்நாடகம் :

கர்நாடக மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும் :—

(அ) தற்போதைய மைசூர் மாநிலம்—பெல்லாரி மாவட்டத்திலுள்ள பின்வரும் பகுதிகள் நீங்கலாக— அப்பகுதிகளாவன : சிருகுப்பா தாலுகா, ஹோஸ்பெட் தாலுகா, மல்லாபுரம் உப-தாலுகாவில் துங்கபத்ரா அணைத் திட்டத்தின் அணைக்கட்டும், மடைகளும் அமைந்துள்ள ஒரு சிறு பகுதி ;

(ஆ) பம்பாய் மாநிலத்தில் கன்னட மொழி பேசப்பட்டு வரும் தார்வார், பீஜபூர், வட கன்னடம், பெல்காம் (பெல்காம் மாவட்டத்திலுள்ள சந்தகாட் தாலுகா நீங்கலாக) ஆகிய நான்கு மாவட்டங்கள் ;

(இ) ஐதராபாத்திலிருந்து ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்கள் ;

(ஈ) சென்னையிலிருந்து தென் கன்னடம் மாவட்டம் (காசர்கோடு தாலுகா நீங்கலாக);

(உ) சென்னை மாநிலத்தின் கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து கொள்ளேகாலம் தாலுகா ;

(ஊ) குடகு ;

பெல்லாரி மாவட்டத்தின் தென் பகுதியை கன்னடத்திலிருந்து ஆந்திரத்துக்கு மாற்றுவது பற்றி, இந்தக் கோரிக்கைக்கான எல்லாக் காரணங்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகே, சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது. துங்கபத்திரா அணைத் திட்டம் ஆந்திரத்துக்கு மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதும், இந்தப் பிரதேசத்தில் இரு மொழிகளும் பேசப்பட்டு வருவதும், ஓரளவு மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில், நீதிபதி மிஸ்ராவின் தீர்ப்பை புனர் பரிசிலனை செய்வதை நியாயமாக்கும் காரணங்களுள் ஒரு சிலவாகும் என்று, குழு கூறுகிறது.

ஐதராபாத் :

பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க பெரிய மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டுவரும்போது, ஐதராபாத் மாநிலத்தை தற்போதுள்ளபடியே வைத்துக்கொண்டிருப்பதென்பது முடியாது ; ஐதராபாத், செகந்தராபாத் ஆகியவற்றிலுள்ள உருது பேசும் மக்களின் விசேடமான தேவைகளைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டுள்ள ஒரு சில ஏற்பாடுகளுக்குட்பட்டு, ஐதராபாத் மாநிலம் பின்வரும் முறைகளில் மாற்றியமைக்கப்பட வேண்டும் :—

ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்களுடன் மராத்வாடாமாவட்டங்களையும் ஐதராபாத் மாநிலத்திலிருந்து பிரித்துவிட வேண்டும்; எஞ்சிய பிரதேசம் ஐதராபாத் என்றே இனியும் அழைக்கப்பட்டுவர வேண்டும்; இந்தப் புதிய மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும் :—

தற்போதைய ஐதராபாத் மாநிலத்தின் தெலுங்கு மாவட்டங்கள்—அவையாவன : மஹ்பூப் நகர், நல்கொண்டா, வாரங்கல் (கம்மம் உட்பட), கரீம்நகர், அடிலாபாத், நைஜாமாபாத், ஐதராபாத், மெடாக்; பிதார் மாவட்டம், நல்கொண்டா மாவட்டத்தில் ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்துவரும் முனகாலா திட்டுப் பிரதேசம்.

எஞ்சிய ஐதராபாத் மாநிலம், 1961-ம் ஆண்டிலோ, அந்த ஆண்டு வாக்கிலோ நடைபெறக் கூடிய பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு, அந்த மாநிலத்தின் சட்டசபை ஐதராபாத் மாநிலம் ஆந்திரத்துடன் சேருவதை, மூன்றில் இரண்டு பகுதி வோட்டுக்களால் ஆதரிக்குமேயானால், ஆந்திரத்துடன் இணைந்து கொள்ளலாம்.

ஆந்திரம்:

ஆந்திர மாநிலம் கீழே கூறப்பட்டுள்ள அற்பமான ஒரு சில மாறுதல்களுக்குட்பட்டு, தற்போதுள்ளபடியே இப்போதைக்கு இருந்துவர வேண்டும் :—

பெல்லாரி மாவட்டத்திலிருந்து சிருகுப்பா, பெல்லாரி, ஹோஸ்பெட் தாலுகாக்களும், மல்லாபுரம் உப-தாலுகாவின் ஒரு பகுதியும் ஆந்திராவுக்கு மாற்றப்பட வேண்டும்.

கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த முனகாலா திட்டுப் பிரதேசம், ஏற்கனவே கூறப்பட்டபடி, ஐதராபாத்துக்கு மாற்றப்பட வேண்டும்.

சென்னை நகரம் விஷயத்தில் தற்போதுள்ள நிலைமையில் மாறுதல் எதுவும் கூடாது ; சென்னை நகரத்தின் எதிர்காலம் இறுதியாக முடிவு செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டும்.

பம்பாய் :

பம்பாய் மாநிலம், குழுவினர் பின்பற்றி வந்துள்ள பொதுக் கோட்பாடுகளுக்கிணங்க, ஒரே மொழி பேசப்படும் பிரதேசத் தொகுதியாக அல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் கலப்புப் பிரதேசமாகவே நீடித்திருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் மூலம், பம்பாயின் எதிர்காலம் பற்றிய பிரச்சினையும் சரியானபடி தீர்த்துவைக்கப்பட்டுவிடும்.

புதிதாக அமைக்கப்படும் பம்பாய் மாநிலமானது, தற்போதைய பம்பாய் மாநிலத்திலிருந்து, பானுஸ்கந்தா மாவட்டத்தில் அபூ ரஸ்தா தாலுகாவும், கன்னடம் பேசப்பட்டுவரும் மாவட்டங்களான தார்வார், பீஜபூர், வடகன்னடம், பெல்காம் (சாந்த்காட் தாலுகா நீங்கலாக) ஆகியவற்றை நீக்கிய பிறகு எஞ்சியிருக்கும் பிரதேசத்துடன் கூட பின்வரும் பிரதேசங்களும் சேர்ந்ததாக இருக்கவேண்டும் :—

(அ) ஐதராபாத்தில் மராத்தி பேசப்படும் மாவட்டங்கள்-அதாவது உஸ்மானுபாத், பீர், அவுரங்காபாத், பர்பாணி, நாண்டெட் ;

(ஆ) சௌராஷ்டிரம் ;

(இ) கட்ச்.

விதர்ப்பம் :

மத்தியப் பிரதேச மாநிலத்தின் மராத்தி பேசப்படும் மாவட்டங்களான புல்தானு, அகோலா, அமராவதி, யோட்மால், வார்தா, நாகபுரி, பாந்த்ரா, சந்தா ஆகியவை அடங்கியதான புதிய மாநிலமொன்று, விதர்ப்பம் என்ற பெயரில் அமைக்கப்பட வேண்டும்.

மத்தியப் பிரதேசம் :

விதர்ப்ப மாநிலம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பின்வரும் பிரதேசங்கள் கொண்ட புதிய மாநிலமொன்று ஏற்படுத்தப்படவேண்டும் ; இந்தப் புதிய மாநிலம் மத்தியப் பிரதேசம் என்ற பெயர்கொண்டதாக இருக்கலாம் :—

(அ) மத்தியப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள 14 மாவட்டங்கள் ;

(ஆ) போபால் முழுவதும், விந்தியப் பிரதேசம் முழுவதும் ;

(இ) மத்திய பாரத்—மண்ட்சார் மாவட்டத்தின் ஸுனேல் திட்டுப் பிரதேசம் நீங்கலாக ;

(ஈ) இராஜஸ்தானில் கோடா மாவட்டத்தின் ஸிரோஞ்ச் சப்-டிவிஷன்.

போபால், விந்தியப் பிரதேசம், மத்திய பாரத் ஆகிய மாநிலங்கள் மூலவளம் நிறைந்த பெரியதொரு பிரதேசத்துடன் சேருவதால் பயன்பெறக்கூடும். இந்தப் புதிய மாநிலத்தில் ஜபல்பூர் நகரம் மத்தியமானதொரு இடத்தில் இருக்குமாகையால், தலைநகராகக் கொள்வதற்கு ஏற்றதாக இருக்கும்.

இராஜஸ்தான் :

புதிதாக ஏற்படுத்தப்படும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஸிரோஞ்சைச் சேர்ந்த பிறகு, இராஜஸ்தான், எஞ்சியுள்ள பிரதேசமும், புதிதாகச் சேர்க்கப்படும் பின்வரும் பிரதேசங்களும் கொண்டதாக இருக்கவேண்டும் :—

(அ) அஜ்மீர் ;

(ஆ) பம்பாயில் பனுஸ்கந்தா மாவட்டத்தின் அபூ ரஸ்தா தாலுகா, மண்ட்சார் மாவட்டத்தின் சுனேல் திட்டுப் பிரதேசம், பஞ்சாபைச் சேர்ந்த ஹிஸ்ஸார் மாவட்டத்தின் லோஹாரு உப-தாலுகா.

பம்பாயிலிருந்து பனுஸ்கந்தா மாவட்டத்தின் அபூ ரஸ்தா தாலுகாவை இராஜஸ்தானுக்கு மாற்றுவது, மொழிப் பற்றுதல் காரணமாகவும், அந்தப் பிரதேச மக்கள் ஓயாமல் வற்புறுத்தி வந்திருப்பதாலும் நியாயமானதேயாகும்.

பஞ்சாப் :

பஞ்சாபைப் பிரிப்பதற்கும், பெப்சுவையும், இமாசலப் பிரதேசத்தையும் தற்போதுள்ளபடியே வைத்திருப்பதற்கும் ஆதரவு காட்டி வற்புறுத்தப்பட்டு வந்துள்ள மொழி பற்றிய காரணங்களையும், பிறவற்றையும், கமிஷன் கவனமாய் ஆராய்ந்து பார்த்தது. இந்தக் கோரிக்கைகளில் எதையும் ஏற்றுக்கொள்வது கடினமென்று குழு கருதுகிறது. மொழியின் தன்மையையும், பஞ்சாபில் போக்குவரத்து சாதனத்தேவைகளையும் கருத்தில் கொண்டு பார்த்தால், பஞ்சாபி பேசும் மாநிலமொன்றை ஏற்படுத்துவதற்கு நியாயமே இல்லை; அம்மாதிரியானதொரு மாநிலத்தை ஏற்படுத்துவதால் இந்தப் பிரதேசத்தின் பொருளாதார வாழ்க்கை சீர்குலைந்துவிடக் கூடும். பஞ்சாபி பேசப்படும் மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முக்கியமாக இரண்டு விஷயங்களால் அடிபட்டுப்போய்விடுகிறது ; முதலாவதாக, அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொதுவான ஆதரவு இதற்கு இல்லை ; இரண்டாவதாக, சச்சரவுக்குக் காரணமாக இருந்த எந்த விஷயங்கள் காரணமாக, பஞ்சாபி பேசப்படும் தனி மாநிலம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததோ, அந்த விஷயங்களில் ஒன்றுகூட இதனால் விலக்கப்பட்டுவிடப் போவதில்லை. அத்தகையதொரு மாநிலத்தை ஏற்படுத்துவதால், மொழிப் பிரச்சினையோ, வகுப்புப் பிரச்சினையோ தீர்ந்துவிடப் போவதில்லை ; அதற்கு மாறாக, தற்போதிருந்துவரும் உணர்ச்சிகளை மேலும் வளர்ப்பதாகவே அது இருக்கும்.

பெப்சுவும், இமாசலப் பிரதேசமும் மிகச் சிறியவையாக இருப்பதால் தனித் தனியே இருந்துவர முடியாது. பெப்சு, இமாசலப் பிரதேசம் ஆகியவற்றிற்கும், தற்போதைய பஞ்சாப் மாநிலத்துக்கும் இடையே இருந்துவரும் பொருளாதார, நிர்வாகத் தொடர்புகளைக் கவனிக்கும்போது, இந்த இரண்டு மாநிலங்களையும் பஞ்சாப் மாநிலத்துடன் இணைப்பதே நியாயமாகும்.

புதிய பஞ்சாப் மாநிலம் பெப்சுவும், இமாசலப் பிரதேசமும் அதனுடன் சேர்ந்த பிறகு, நன்கு இணைந்ததொரு பிரதேசமாக இருக்கும் ; இந்தப் பிரதேசத்திலுள்ள பல்வேறு சர்க்கார்கள் தற்போது பரிசிலனை செய்துகொண்டிருக்கும் தீவிரமான அபிவிருத்தித் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றி வைக்கக்கூடிய நிலைமையில் இருக்கும்.

உத்தரப் பிரதேசம்:

உத்தரப் பிரதேசத்தைப் பிரிப்பதற்கான முகாந்திரமெதுவும் இல்லை; இந்த மாநிலம் தற்போதுள்ளபடியே இருந்துவர வேண்டும்.

பீகார் :

தென் பீகாரில் ஜார்கண்ட் மாநிலமொன்றை ஏற்படுத்துவதற்கு அவசியமெதுவுமில்லை ; அது விரும்பத்தக்கதுமல்ல; ஆனால் இந்தப் பிரதேசத்தின் பிரத்தியேகமான தேவைகள் கவனிக்கப்பட வேண்டும்.

மேற்கு வங்காளம் :

மேற்கு வங்காளத்தின் தொடர்பு அற்றிருக்கும் வட பகுதிக்கும், அந்த மாநிலத்தின் பிற பகுதிகளுக்குமிடையே பூமி அமைப்பு ரீதியான தொடர்பு இருப்பது அவசியமாகிறது; இதற்கான ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும். ஆகவே, மஹாநந்தா நதியின் கிழக்குப் பக்கத்தில் பூர்ணியா மாவட்டத்தின் ஒரு பகுதியை, இதற்கு அவசியமான குறைந்தபட்ச பிரதேசமாக இருப்பதால், பீகாரிலிருந்து மேற்கு வங்காளத்துக்கு மாற்றிவிட வேண்டும்.

அசாம் :

அசாம், அதனுடைய பூகோள ரீதியான நிலைமையையும், மக்களின் பூர்வீகக் கலாச்சார வரலாற்றையும் கருதி கலப்பு மொழி மாநிலமாகவே நீடித்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அசாமில் மலை ராஜ்யமொன்றை ஏற்படுத்துவது காரிய சாத்தியமானதல்ல ; மேலும், அசாமின் தனித் தன்மைகளையும், சூழ்நிலைகளையும் கவனிக்கும்போது, தனியான மலை ராஜ்யமொன்றை ஏற்படுத்துவதற்கு அவசியமும் இல்லை ; ஆனபோதிலும், மலை ஜில்லாக்களின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் ;

திரிபுரா, அசாமில் சேர்க்கப்பட வேண்டும்.

வடகிழக்கு எல்லை ஏஜென்சி சம்பந்தமாகத் தற்போது இருந்துவரும் ஏற்பாடு நீடித்திருந்து வர வேண்டும்.

ஒரிசா :

1936-ம் வருடம், நீண்ட காலம் விவரமான பரிசிலனை நடத்திய பின்னர், நிர்ணயிக்கப்பட்ட ஒரிசாவின் எல்லைகளில் எவ்வித மாறுதல்களும் செய்யப்பட வேண்டிய தேவை இல்லை.

ஜம்மு - காஷ்மீர் :

ஜம்மு - காஷ்மீர் பற்றி எவ்வித சிபாரிசுகளும் செய்யப்படவில்லை.

இதுவரை பிரஸ்தாபிக்கப்படாத யூனிட்டுகளும், பகுதிகளும் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திலிருந்துவரும் ; இவைகள் பிரதேசங்கள் (டெரிட்டரிகள்) என்றழைக்கப்படும்.

டில்லி :

டில்லி மத்திய சர்க்காரின் இருப்பிடமாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமானால், அது சரியான கொள்கையை அடிப்படையாகக் கொண்டதும், காரியாம்சத்தில் நிர்வாக சாத்தியமானதுமோர் மாதிரியில் அமைக்கப்பட வேண்டும்.

மணிப்பூர் :

தற்காலத்துக்கு மணிப்பூர் மத்திய சர்க்காரின் நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசமாக இருக்கவேண்டும். கடைசியாக இதை அசாம் மாநிலத்துடன் இணைப்பதே குறிக்கோளாக இருக்கவேண்டும்.

அந்தமான், நிக்கோபார் தீவுகள் :

அந்தமான், நிக்கோபார் தீவுகள் பிரச்சினையில் இப்பொழுதுள்ள நிலைமையே மேலும் நீடித்து வர வேண்டும்.

அண்ணுதுரை பாபநாசம் வருகை

16-10-55 மாலை 6 மணிக்கு, பாபநாசம், கீழ வீதியில், தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணுதுரை, மற்றும் பலர் பேசுவர்.

வட சென்னை முடிதிருத்துவோர் சங்கத் திறப்பு விழா

11—10—55 காலை 8 மணிக்கு சென்னை - தண்டையார்பேட்டை எண் 4/1, வரதராசபெருமாள் கோயில் தெருவில், திரு. வி. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் துர்கையா, வி. ஏ. பகவதி, எஸ். வெங்கடேசலு, எம். எஸ். எஸ். மணி, இரா. ஜெகநாதன் ஆகியோர் பேசுவர்.

பிரதமர் நேரு லண்டன் செல்வார் !

புதுடில்லி, அக். 9—

இந்தியப் பிரதமர் பண்டித நேரு, அடுத்த கோடையில், லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள சம்மதித்திருக்கிறார் என்று தெரிகிறது.

இங்கிலாந்துப் பிரதமர் அந்தோனி ஈடன், இதர காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்களுக்கு, அடுத்து, பிரதமர்கள் மாநாடு ஒன்றில் கூடுவது பற்றி எழுதிக் கேட்டிருந்தபடி மாநாடு அடுத்த கோடையில் நடைபெறுவது என முடிவாகி இருக்கிறதாம்.

கடத்தப்பட்ட ரூ. 2 லட்சம் பெறுமான கஞ்சா !

கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட சுமார் 2 லட்சம் ரூபாய் பெறுமான 45 மணங்கு கஞ்சாவை ஏற்றிக்கொண்டு சென்ற நாட்டுப் படகு ஒன்றை சுல்தான் கஞ்சு போலீசார் கங்கை நதியின் மத்தியில் பிடித்ததாக கடந்த 7-ந் தேதியன்று பகவல்பூருக்கு தகவல் கிடைத்திருக்கிறது. 4 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.